**கவனிக்க.-** *2010.10.29 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 1679 - 2010 නොවැම්බර් මස 04 වැනි බ්‍රහස්පතින්දා - 2010.11.04**

*1679 ஆம் இலக்கம் – 2010 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 04 ஆந் திகதி வியாழக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (IIஆ) – விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | 1694 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 1694 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | - | ஏல விற்பனைகள் | 1698 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | - | நானாவித அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

## முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2010, நவெம்பர் மாதம் 12 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2010, ஒற்றோபர் மாதம் 29 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2010 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

**பொருளாதார அபிவிருத்தி அமைச்சு**

தேசிய தாவரவியற் பூங்கா திணைக்களம்

***பேராதனை ராஜரீகமான தாவரவியற் பூங்காவின் உணவகத்தை (கெப்டேரியா) நடாத்திச்செல்லுதல் 2010-2011***

*தேசிய தாவரவியற் திணைக்களத்திற்கு உரிய பேராதனை ராஜரீகமான தாவரவியற் பூங்காவின் உள்ளே அமையப்பெற்றுள்ள உணவகத்தை (கெப்டேரியா) 2010-2011 ஆம் ஆண்டு காலப்பகுதியினுள் நடாத்திச் செல்வதன் பொருட்டு பொருத்தமான மனுதாரரை தெரிவுசெய்யும் பொருட்டு தகைமையுள்ள மற்றும் இயலுமையைக் கொண்டுள்ள மனுதாரரிடம் இருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் பெற்றுக்கொள்ளப்படும்.*

*2. விலைமனுக்கள் 2010.11.26 ஆந் திகதி மு. ப. 10.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும். விலைமனுக்கள் பெற்றுக்கொள்வது முடிவுறுத்தப்பட்டவுடனே விலைமனுக்கள் திறக்கப்படும். அதன் பொருட்டு விலைமனுக் கோருவோர் அல்லது அவர்களது அதிகாரத்தைப் பெற்றுள்ள பிரதிநிதி ஒருவருக்கு அச்சந்தர்ப்பத்தில் பங்குகொள்ள முடியும்.*

*3. குத்தகை ஆவணங்கள், நிபந்தனைகள் மற்றும் எனைய விபரங்கள் பேராதனை இலக்கம் 1094, சிறிமாவோ பண்டாரநாயக்க மாவத்தையில் அமையப்பெற்றுள்ள தேசிய தாவரவியற் பூங்கா திணைக்களத்தின் பிரதான பணிமனையில் 2010, நவெம்பர் மாதம் 24 ஆந் திகதிவரை அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ள முடியும். அதன் பொருட்டு மீளளிக்கப்படாத வைப்பான ரூபா 5,000 செலுத்தி பெற்றுக்கொள்ளப்படும் பொது 172 பற்றுச்சீட்டை கேள்வி மனுதாரர் சமர்ப்பித்தல் வேண்டும்.*

*4. விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்களின் 2 பிரதிகள் பெற்றுக்கொடுக்கப்படும். அவற்றினைப் பூரணப்படுத்தி மூலப்பிரதி மற்றும் பிரதி எனக் குறிப்பிட்டு வெவ்வேறாக இரண்டு கடித உறைகளில் சமர்ப்பித்தல் வேண்டும். அத்துடன் குத்தகைப் படிவங்களை உள்ளிட்டு அனுப்பும் கடித உறைகளில் திறக்கக்கூடிய இடங்களை இறப்பர் இலச்சினையால் முத்திரையிடப்பட்டு அனுப்பிவைப்பது கட்டாயமாகும். அவ்வாறே கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "உணவகம் (கெப்டேரியா) நடாத்திச் செல்லுதல்" எனும் வாசகம் குறிப்பிடப்பட்டு இருத்தல் வேண்டும்.*

*5. விலைமனுக்களை "தலைவர், கேள்விச்சபை, (பேரளவில்) தேசிய தாவரவியற் பூங்கா திணைக்களம், தபால் பெட்டி இலக்கம் 14, பேராதனை" எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும். அவ்வாறு இல்லையேல் நேரடியாக திணைக்களத்திற்கு வருகை தந்து விலைமனுக்களை இடுவதற்காக வைக்கப்பட்டுள்ள விலைமனுப் பெட்டியில் இடலாம். தாமதித்து கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.*

*6. விலைமனு ஆவணங்களுடன் ரூ. 2,00,000 பெறுமதியான 90 நாட்களுக்கு ஏற்புடைய பிணைப்பத்திரம் அங்கீகரிக்கப்பட்ட வங்கி ஒன்றின் மூலம் அல்லது காப்புறுதி நிறுவனம் ஒன்றின் மூலம் பெற்றுக்கொண்டு சமர்ப்பித்தல் வேண்டும்.*

*7. தகைமையுள்ள குத்தகைக்காரரை தெரிவுசெய்வது தொடர்பில் முழுமையான உரிமை திணைக்களத்தின் (பேரளவிலான) விலைமனுக் கோரல் சபைக்கு உரியதாகும். அதன் பொருட்டு எவ்விதத்திலேனும் அதிகாரம் செலுத்துவதானது தெரிவுசெய்வதன் பொருட்டு தகைமையைக் கொண்டில்லை எனக் கருத்திற்கொள்ளப்படும். இந்த விலைமனுக் கோரல் அறிவித்தல் மற்றும் விலைமனு ஆவணங்களில் உள்ளடக்கப்படாத எந்த ஒரு விடயம் தொடர்பிலும் தீர்மானம் மேற்கொள்வதற்கான சகல உரிமையும் தேசிய தாவரவியற் பூங்கா திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கே உரியதாகும். இது தொடர்பில் மேலதிக தகவல் பெற வேண்டுமாயின் 081-2388654 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு இத்திணைக்களத்தின் "பணிப்பாளர் (நிதி)" இடமிருந்து பெற்றுக்கொள்ள முடியும்.*

*தலைவர்,*
*திணைக்களத்தின் விலைமனுக் கோரல் சபை*
*(பேரளவில்).*

*தேசிய தாவரவியற் பூங்கா திணைக்களம்,*
*பேராதனை.*
*2010, ஒற்றோபர் 20.*

*11-82*

---

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

**பகிரங்க அறிவித்தல்**

வரையறுக்கப்பட்ட கம்பனியாக மாற்றப்பட்டதன் விளைவான பெயர் மாற்றம்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் (அதிகாரச் சட்டம்) 11(5) ஆம் பிரிவு ஏற்பாடுகளுக்கு அமைய இந்த அறிவித்தல் விடுக்கப்படுகின்றது. இலங்கையில் கூட்டிணைக்கப்பட்டு, 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்டு (பதிவு இல. பீபி 553பீவீ) இல. 400, டீன்ஸ் வீதி, கொழும்பு 10 என்னும் முகவரியில் தனது பதிவுசெய்யப்பட்ட அலுவலகத்தைக் கொண்டிருக்கும் ஹேலீஸ் டேர்மினல்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் அதிகாரச் சட்டத்தின் 28 ஆம் பிரிவுக்கு அமைய, 2010, ஒற்றோபர் 7 ஆந் திகதி முதல் ஒரு வரையறுக்கப்பட்ட கம்பனியாக மாற்றப்பட்டுள்ளது என்பதை இத்தால் அறிவிக்கிறோம்.*

ஹேலீஸ்ன டேர்மினல்ஸ் லிமிட்டெட்,

*சபையின் கட்டளைப்படி,*

ஹேலீஸ் குரூப் சேர்விசஸ் லிமிட்டெட்
*கம்பனிச் செயலாளர்கள்.*

*இல. 400, டீன்ஸ் வீதி,*
*கொழும்பு 10,*
*2010, ஒற்றோபர் 14.*

*11-50*

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 11(1) ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனியின் பெயர், அதன் தத்துவம் மாறியதனால் மாற்றம் செய்யப்படுகின்றது :-

*கம்பனியின் பழைய பெயர்* : ஒறியன்ட் கார்மன்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனியின் இலக்கம்* : பீவீ 9346
*பதிவு அலுவலகம்* : இல. 49/16, ஐஸ்லன்ட் பில்டிங், காலி வீதி, கொழும்பு 03
*கம்பனியின் புதிய பெயர்* : ஒறியன்ட் கார்மன்ட்ஸ் லிமிட்டெட்

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

ஒறியன்ட் கார்மன்ட்ஸ் லிமிட்டெட்,
பி. டபிள்யூ. கோர்ப்பரேட் செக்கரட்டேரியல் (பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

11-55

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 9(1) இன் கீழான அறிவித்தல் கீழே குறிப்பிடப்படுகிறது :-

*கம்பனியின் பெயர்* : மட்டுப்படுத்தப்பட்ட இலங்கை காப்புறுதி (தனியார்) கம்பனி
*கம்பனியின் இலக்கம்* : பீவீ 74594
*பதிவுசெய்யப்பட்ட அலுவலகம்* : ஒஸ்ரேலியன் மைக்ரேசன் கன்சல்டன்சீஸ் சினமன் லேக் சைட், கீழ் மாடி, இல. 115, ஸ்ரீமத் சிற்றம்பலம் ஏ. காடினர் மாவத்தை, கொழும்பு 2, இலங்கை
*பதிவுசெய்யப்பட்ட தினம்* : 2010.09.29

மேலே கூறப்பட்ட கம்பனியின் சார்பாக-

எல். ஏ. பதிரவிதான,
செயலாளர்.

இல. 179/13, வெலிவிட்ட றோட்,
மாலபே.
தொலைபேசி இல. : 077-3738532.

11-125

## பகிரங்க அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின்கீழ் கூட்டிணைத்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவிற்கேற்ப மெக்பிறிட்ஜ் புளூ (பிறைவேட்) லிமிட்டெட் 2010, ஒற்றோபர் 1 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்டது என்பதை இத்தால் அறியத்தருகிறோம் :-

*கம்பனியின் பெயர்* : மெக்பிறிட்ஜ் புளூ (பிறைவேட்) லிமிட்டெட்
*கூட்டிணைக்கப்பட்ட திகதி* : 2010.10.01
*கம்பனியின் பதிவிலக்கம்* : பீவீ 74646
*பதிவுசெய்யப்பட்ட அலுவலகம்* : இல. 407/23பி, பழைய கொட்டாவ வீதி, நுகேகொடை

சபையின் கட்டளைப்படி,

ஜெனிவிவ் பியூம்மினி ரணசிங்க,
கம்பனிச் செயலாளர்.

11-126

---

## 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 9(1) பிரகாரம் பொது அறிவித்தல்

*கம்பனியின் பெயர்* : டிறான்ஸ்நஷனல் சேர்விசஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனியின் இலக்கம்* : பீவீ 74625
*கூட்டிணைக்கப்பட்ட திகதி* : 2010.10.01
*பதியப்பட்ட விலாசம்* : இல. 96/32, பழைய கெஸ்பேவ பாதை, நுகேகொடை

கம்பனிச் செயலாளர்.

11-127

---

## அற்றோணி தத்துவத்தை இரத்துச் செய்தல்

தெரணியகல ருகாஷல் தோட்டத்தில் குடியிருக்கும் சின்னையா காளிதாஸ் ஆகிய நான், கொஸ்கம, கணம்பெல்ல, அவிசாவளையில் குடியிருக்கும் ஹேனபப்லகே மல்மி உதேஷிகா (தே. அ. அ. இல. 835310027V) என்பவருக்கு பிரசித்த நொத்தாரிஸ் சம்பத் ஸ்ரீ ரோஹன சிங்க புஞ்சி ஹேவா அவர்களால் 2005.11.24 ஆந் திகதி எழுதி உறுதி செய்யப்பட்ட இல. 124 என்ற அடோர்னி தத்துவப் பத்திரம் மூலமாக வழங்கப்பட்டிருந்த அற்றோணி தத்துவபத்திரத்தை எனது விருப்பத்தின் பேரிலும் அபிலாஷையின் பேரிலும் 2010.10.19 ஆந் திகதி தொடக்கம் ரத்துச் செய்கிறேன் என்றும் இத் திகதிக்கு பின்னர் அவர் புரியப்படும் எதுவித செயலுக்கும் நான் பொறுப்பு கூற மாட்டேன் என்று இதன் மூலம் அறிவித்தல் தருகிறேன்.

சின்னையா காளிதாஸ்.

11-42

**2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 9(1) விதிகளுக்கமைய அறிவித்தல்**

*கம்பனியின் பெயர்* : சுமேதா இன்வெஸ்ட்மென்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனியின் இலக்கம்* : பீவீ 74957
*பதிவுசெய்யப்பட்ட விலாசம்* : இல. 883/22, பிளவர் வீதி, எதுல் கோட்டே, கோட்டே

கம்பனிச் செயலாளர்.

11-79

---

**2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் அறிவித்தல்**

*கம்பனியின் பெயர்* : ஸ்ரீம் போட் ரெஸ்ரோறன்ட் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனியின் பதிவு இலக்கம்* : பீவீ 73863
*கம்பனியின் பதிவு திகதி* : 2010.08.19
*கம்பனியின் பதிவுசெய்யப்பட்ட முகவரி* : இல. 154, கின்ஸி வீதி, கொழும்பு 7

செயலாளர்.

11-81/1

---

**2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் அறிவித்தல்**

*கம்பனியின் பெயர்* : ஸ்ரீம் போட் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனியின் பதிவு இலக்கம்* : பீவீ 73864
*கம்பனியின் பதிவு திகதி* : 2010.08.19
*கம்பனியின் பதிவுசெய்யப்பட்ட முகவரி* : இல. 14, நாராஹென்பிட்டி வீதி, நாவலை

செயலாளர்.

11-81/2

---

**அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 9(1) ஆம் பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் இங்கு குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனம் மட்டுப்படுத்தப்பட்ட கம்பனியாக கூட்டிணைக்கப்பட் டுள்ளது :-

*கம்பனியின் பெயர்* : நிகொட் கன்ஸ்ரக்ஷன் அன்ட் கன்ஸல்ரன்சி லங்கா (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனியின் இலக்கம்* : பீவீ 73847
*கூட்டிணைக்கப்பட்ட திகதி* : 2010.08.18
*பதிவுசெய்யப்பட்ட அலுவலக விலாசம்* : இல. 59-1/1, ஹைலெவல் வீதி, கிருலப்பனை, கொழும்பு 6

பணிப்பாளர்.

11-83

---

**அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டதாக அறிவிக்கப் படுகின்றது :-

*கம்பனியின் பெயர்* : டெலிஜ லங்கா (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனியின் பதிவு இலக்கம்* : பீவீ 74673
*கம்பனியின் பதிவு முகவரி* : இல. 221, வோட் பிளேஸ், கொழும்பு 7

கோர்ப்பரேட் எட்வைசரி சேர்விசஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

11-84

---

**அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனி 2010.09.17 ஆந் திகதியன்று கூட்டிணைக்கப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது :-

*கம்பனியின் பெயர்* : இந்தியன் ஓசன் பீ அன்ட் ஐ கிளப் அசோசியேஷன் ஒஃப் சிலோன் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனியின் பதிவு இலக்கம்* : ஜீஏ 2450
*கம்பனியின் பதிவு முகவரி* : இல. 47, அலெக்ஸான்றா பிளேஸ், கொழும்பு 7

கோர்ப்பரேட் எட்வைசரி சேர்விசஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

11-85

---

**அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனி 2010.10.16 ஆந் திகதியன்று கூட்டிணைக்கப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது :-

*கம்பனியின் பெயர்* : லோரா புரொபடீஸ் லெவன் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனியின் பதிவு இலக்கம்* : பீவீ 74739

*கம்பனியின் பதிவு முகவரி* : இல. 44, அலெக்ஸான்றா பிளேஸ், கொழும்பு 7

கோர்ப்பரேட் எட்வைசரி சேர்விசஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

*11-86*

---

## அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-*

*கம்பனியின் பெயர்* : லோரா புரப்பட்டிஸ் டுவண்டி டூ (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனியின் பதிவு இலக்கம்* : பீவீ 74655
*கம்பனியின் பதிவு முகவரி* : இல. 47, அலெக்ஸான்றா பிளேஸ், கொழும்பு 7
*கூட்டிணைக்கப்பட்ட திகதி* : 2010.10.01

கோர்ப்பரேட் எட்வைசரி சேர்விசஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

*11-87*

---

## அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-*

*கம்பனியின் பெயர்* : என்வயர்மென்டல் இன்னோவேசன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனியின் பதிவு இலக்கம்* : பீவீ 74651
*கம்பனியின் பதிவு முகவரி* : இல. 51சீ, ஹுலுதாகொட வீதி, கல்கிசை
*கூட்டிணைக்கப்பட்ட திகதி* : 2010.10.01

கோர்ப்பரேட் எட்வைசரி சேர்விசஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

*11-88*

---

## அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 9 விதிகளுக்கமைய கீழே தரப்பட்டிருக்கும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளது என இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது. விபரம் பின்வருமாறு :-*

*கம்பனியின் பெயர்* : ரனஜய லங்கா (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனியின் பதிவு இலக்கம்* : பீவீ 74735
*கூட்டிணைக்கப்பட்ட திகதி* : இல. 2010.10.06
*பதிவுசெய்யப்பட்டுள்ள முகவரி* : இல. 284/பி/20, ராஜசிங்க வீதி, கடுவளை

சபையின் கட்டளைப் பிரகாரம்,

பினான்சியல் அன்ட் பிசினஸ் அசோசியேட்
(பிறைவேட்) லிமிட்டெட்.

*11-112*

---

## வரையறுக்கப்பட்ட கம்பனியின் கூட்டிணைப்பிற்கான அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 9(1) இன்கீழ் இவ்வறிவித்தல் பிரசுரிக்கப்படுகின்றது :-*

*(1) கம்பனியின் பெயர்* : அன்னா லங்கா ரவஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*(2) கூட்டிணைப்பின் இலக்கம்* : பீவீ 73374
*(3) பதிவுசெய்யப்பட்ட அலுவலகம்* : 193/1-1/1, காசல் வீதி, கொழும்பு 08

கம்பனிச் செயலாளர்.

*11-109/1*

---

## வரையறுக்கப்பட்ட கம்பனியின் கூட்டிணைப்பிற்கான அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 9(1) இன்கீழ் இவ்வறிவித்தல் பிரசுரிக்கப்படுகின்றது :-*

*(1) கம்பனியின் பெயர்* : ஜக்டம்பா டுவர்ஸ் ரக்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*(2) கூட்டிணைப்பின் இலக்கம்* : பீவீ 72865
*(3) பதிவுசெய்யப்பட்ட அலுவலகம்* : 193/1-1/1, காசல் வீதி, கொழும்பு 08

கம்பனிச் செயலாளர்.

*11-109/2*

# ஏல விற்பனைகள்

**சம்பத் வங்கி பீஎல்சீ**

(முன்பு சம்பத் வங்கி லிமிடெட் என அழைக்கப்பட்டது)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழான விற்பனை அறிவித்தல்*

**சொத்துக்கள், நிலமனைகள் ஏல விற்பனை**

கணக்கு இல. : 1005 5030 7191 - டீ. எச். அன்னக்ககே

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக் கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் 2008.04.30 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2009.12.04 ஆந் திகதிய இலங்கை வர்த்தமானியிலும் 2009.11.25 ஆந் திகதிய ''திவயின'', ''ஐலண்ட்'' மற்றும் ''தினக்குரல்'' பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான பதினொரு இலட்சத்து முப்பத்துநான்காயிரத்து நாநூற்றுப்பத்து ரூபா பத்து சதம் (ரூ. 11,34,410.10) 2008, சனவரி 25 ஆந் திகதி முதல் அறவிடப்படவேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதிவரை ஒன்பது இலட்சத்து தொண்ணூற்றோராயிரத்து எண்ணூற்றுமூன்று ரூபா மூன்று சதம் (ரூ. 9,91,803.03) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதினான்கு வீதம் (14%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக்கொள்வதற்கு பிணையாக வைக்கப்பட்டுள்ள, இங்கு அட்டவணையில் நேர்த்தியாக விபரிக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கண்டி உத்தரவுபெற்ற ஏலதாரரான ஐ. டபிள்யூ. ஜயசூரிய மூலமாக 2010 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 23 ஆந் திகதி பி. ப. 2.30 மணி முதல் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என இத்தால் தீர்மானிக்கின்றது.

**அட்டவணை**

சபரகமுவ மாகாணம், கேகாலை மாவட்டம், கினிகொட கோரலேயின் தியலந்தஹமுன பத்துவின் கேகாலை பிரதேச சபை எல்லைகளுக்குள் புவக்தெனியவில் அமைந்த ''வரெல்லஹேன தற்போது வத்தை'' என அழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் கே. கே. பண்டித்தரத்ன என்பவரால் தயாரிக்கப்பட்ட 2005, மாச்சு 03 ஆந் திகதியிடப்பட்ட இல. 4868 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு லொட் 03 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன- வடக்கிற்கு : தற்போது ஆற்றின் ஒரு பகுதியாகவுள்ள லொட்கள் 4 மற்றும் 5 ; கிழக்கிற்கு : கூறப்பட்ட இல. 4868 எனும் வரைபடத்தில் லொட் 6 மற்றும் இல. 4436 எனும் வரைபடத்தில் லொட் 7 ; தெற்கிற்கு : தற்போது வீதியாகவுள்ள கூறப்பட்ட இல. 4868 எனும் வரைபடத்தில் லொட் 1 ; மற்றும் மேற்கிற்கு : கூறப்பட்ட இல. 4868 எனும் வரைபடத்தில் லொட் 2 மற்றும் இல. 4436 எனும் வரைபடத்தில் லொட் 5- ஆகிய இவ்வெல்லைகளுக்குள் அமைந்த காணி, விஸ்தீரணம் ஒரு றூட் மற்றும் இருபத்துமூன்று பேர்ச்சுகள் (0ஏ. 1றூ. 23பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டிடங்களுடன் அதற்கண் அமைந்த சகல வழி உரிமைகள், ஏனைய சௌகரியங்கள், வரப்பிரசாதங்கள், உட்பிரவேசங்கள், இரண்டாந்தர மார்க்க உரிமைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய இணைப்புகளுடன் கூறப்பட்ட இல. 4868 எனும் வரைபடத்திற்கு அமைவாக கேகாலை காணிப்பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் பி465/55 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர்கள் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

11-121/2

---

**சம்பத் வங்கி பீஎல்சீ**

(முன்பு சம்பத் வங்கி லிமிடெட் என அழைக்கப்பட்டது)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழான விற்பனை அறிவித்தல்*

**சொத்துக்கள், நிலமனைகள் ஏல விற்பனை**

கணக்கு இல. : 1082 5315 6081/0018 5001 6778 - எம். ரீ. எஸ். தமயந்தி

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக் கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் 2010.06.24 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2010.08.13 ஆந் திகதிய இலங்கை வர்த்தமானியிலும் 2010.08.13 ஆந் திகதிய ''திவயின'', ''ஐலண்ட்'' மற்றும் ''தினக்குரல்'' பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான முப்பது இலட்சத்து நாற்பத்துநான்காயிரத்து இருநூற்றெண்பத்தொரு ரூபா இருபத்தொரு சதம் (ரூ. 30,44,281.21) 2010, பெப்புருவரி 23 ஆந் திகதி முதல் அறவிடப்படவேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதிவரை இருபத்துமூன்று இலட்சத்து பதின்மூவாயிரத்து எண்ணூற்றெண்பத்தாறு ரூபா முப்பத்துமூன்று சதம் (ரூ. 23,13,886.33) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு இருபது வீதம் (20%) மேலும் இரண்டு இலட்சத்து நாற்பத்தோராயிரத்து ஐந்நூற்றைம்பது ரூபா (ரூ. 2,41,550) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு இருபத்துநான்கு வீதம் (24%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக்கொள்வதற்கு பிணையாக வைக்கப்பட்டுள்ள, இங்கு அட்டவணையில் நேர்த்தியாக விபரிக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கண்டி உத்தரவுபெற்ற ஏலதாரரான ஐ. டபிள்யூ. ஜயசூரிய மூலமாக 2010 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 26 ஆந் திகதி மு. ப. 11.30 மணி முதல் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என இத்தால் அறியத்தருகின்றோம்.

### அட்டவணை

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், சல்பிட்டி கோரலேயின் பல்லே பத்துவையில் மஹரகமை நகர சபை எல்லைகளுக்குள், பன்னிப்பிட்டி கிராமத்தில் அமைந்த ''தெல்காஹாவத்த'' என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஏ. பீ. ஐ. சொய்சா என்பவரால் தயாரிக்கப்பட்ட 1997, செத்தெம்பர் 08 ஆந் திகதியிடப்பட்ட இல. 189 A/ 97 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 2A எனக்குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன வடக்கிற்கு : வரிமதிப்பீட்டு இல. 20/ 1 ஐ ஏற்ற பீ. ஈ. டீ. தர்மசிரி உரிமம் கோரும் காணி மற்றும் லொட் 3 ; கிழக்கிற்கு : லொட் 3 மற்றும் லொட் 2B ; தெற்கிற்கு: லொட் 2B மற்றும் லொட் 1 மற்றும் ; மேற்கிற்கு : லொட் 1 மற்றும் வரிமதிப்பீட்டு இல. 20/ 1 ஐ ஏற்ற பீ. ஈ. டீ. தர்மசிரி உரிமம் கோரும் காணி ஆகிய இவ்எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் பதினொன்று தசம் நான்கு மூன்று பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 11.43பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் சகல வீதி உரிமைகள், ஏனைய சௌகரியங்கள், வரப்பிரசாதங்கள், உட்பிரவேசங்கள், இரண்டாந்தர மார்க்க உரிமைகள், மற்றும் அதனுடன் தொடர்புடைய இணைப்புகளுடன் கூறப்பட்ட இல. 189 A/ 97 எனும் வரைபடத்திற்கு அமைவாக நுகேகொடை காணிப் பதிவகத்தில் பரிமாணம்/ பக்கம் M 2975/ 210 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், சல்பிட்டி கோறளையின் பல்லே பத்துவையில் மஹரகமை நகர சபை எல்லைகளுக்குள், பன்னிப்பிட்டி கிராமத்தில் அமைந்த ''தெல்காஹாவத்த'' என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஏ. பீ. ஐ. சொய்சா என்பவரால் தயாரிக்கப்பட்ட 1997, செத்தெம்பர் 08 ஆந் திகதியிடப்பட்ட இல. 189 A/ 97 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 2B எனக்குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன வடக்கிற்கு : லொட் 2A ; கிழக்கிற்கு : லொட் 3 மற்றும் வீடுகளுக்கான வீதி ; தெற்கிற்கு: வீடுகளுக்கான வீதி மற்றும் லொட் 1 மற்றும் ; மேற்கிற்கு : லொட் 1 மற்றும் லொட் 2A. ஆகிய இவ்எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் சைபர் தசம் ஏழு நான்கு பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 0.74பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் சகல வீதி உரிமைகள், ஏனைய சௌகரியங்கள், வரப்பிரசாதங்கள், உட்பிரவேசங்கள், இரண்டாந்தர மார்க்க உரிமைகள், மற்றும் அதனுடன் தொடர்புடைய இணைப்புகளுடன் கூறப்பட்ட இல. 189 A/ 97 எனும் வரைபடத்திற்கு அமைவாக நுகேகொடை காணிப்பதிவகத்தில் பரிமாணம்/ பக்கம் M 2975/ 214 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

வழி மீது பிரவேசிப்பதற்கான மார்க்க உரிமைகளுடன் கூடியது.-

உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஏ. பீ. ஐ. சொய்சா என்பவரால் தயாரிக்கப்பட்ட 1997, செத்தெம்பர் 08 ஆந் திகதியிடப்பட்ட இல. 397 எனும் வரைபடத்தின் லொட 5 (வீதிக்கான ஒதுக்கம்) மற்றும் நுகேகொடை காணிப் பதிவகத்தில் பரிமாணம்/ பக்கம் M 2340/ 43 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர்கள் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

11-121/ 3

### சம்பத் வங்கி பீஎல்சீ

(முன்பு சம்பத் வங்கி லிமிட்டெட் என அழைக்கப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழான விற்பனை அறிவித்தல்

**சொத்துக்கள், நிலமனைகள் ஏல விற்பனை**

கணக்கு இல. : 1069 5302 1996 – கே. எம். ஏ. ஜனநந்தன

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக் கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் 2007.02.22 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2010.08.13 ஆந் திகதிய இலங்கை வர்த்தமானியிலும் 2010.08.06 ஆந் திகதிய ''திவயின'', ''ஐலண்ட்'' மற்றும் ''தினக்குரல்'' பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான ஆறு இலட்சத்து அறுபத்தொன்பதாயிரத்து எழுநூற்றுமுப்பத்துமூன்று ரூபா இருபத்துமூன்று சதம் (ரூ. 6,69,733.23) 2006, திசெம்பர் 28 ஆந் திகதி முதல் அறவிடப்படவேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதிவரை ஆறு இலட்சத்து பதினாறாயிரத்து இருநூற்றெண்பத்தெட்டு ரூபா இருபத்துமூன்று சதம் (ரூ. 6,16,288.23) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதின்மூன்று தசம் ஐந்து வீதம் (13.5%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக்கொள்வதற்கு பிணையாக வைக்கப்பட்டுள்ள, இங்கு அட்டவணையில் நேர்த்தியாக விபரிக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கண்டி உத்தரவுபெற்ற ஏலதாரரான ஐ. டபிள்யூ. ஜயசூரிய மூலமாக 2010 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 26 ஆந் திகதி மு. ப. 10.00 மணி முதல் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என இத்தால் அறியத்தருகின்றோம்.

### அட்டவணை

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், ஹேவாகம் கோரலேயின் மெதபத்துவின் ஹோமாகமை பிரதேச சபை எல்லைகளுக்குள், தம்பெயில் அமைந்த தம்புகொல்ல எஸ்டேட் என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் கே. டீ. ஜீ. வீரசிங்ஹ என்பவரால் தயாரிக்கப்பட்ட 1997, திசெம்பர் 2 ஆந் திகதியிடப்பட்ட இல. 1339 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் – நிர்ணயிக்கப்பட்டு லொட் 26 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன – வடக்கிற்கு : லொட் 25 ; கிழக்கிற்கு : லொட் 52 ; தெற்கிற்கு : லொட் 27 மற்றும் ; மேற்கிற்கு: லொட் 47. இவ்எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் பத்து தசம் சைபர் எட்டு பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 10.08பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டிடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் சகல வீதி உரிமைகள், ஏனைய சௌகரியங்கள், வரப்பிரசாதங்கள், உட்பிரவேசங்கள், இரண்டாந்தர மார்க்க உரிமைகள், மற்றும் அதனுடன் தொடர்புடைய இணைப்புகளுடன் கூறப்பட்ட இல. 1339 எனும் வரைபடத்திற்கு அமைவாக அவிசாவளை காணிப்பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் N 317/79 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

வழி மீதும் அதன் ஊடாகவும் பிரவேசிப்பதற்கான மற்றும் மார்க்க உரிமைகளுடனானது.-

மேற்கூறப்பட்ட இல. 1339 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட லொட்கள் 47 மற்றும் 44.

பணிப்பாளர்கள் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

11-121/4

---

**சம்பத் வங்கி பீஎல்சீ**

(முன்பு சம்பத் வங்கி லிமிட்டெட் என அழைக்கப்பட்டது)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழான விற்பனை அறிவித்தல்*

**சொத்துக்கள், நிலமனைகள் ஏல விற்பனை**

கணக்கு இல. : 0050 5000 2243 - வீ. பீ. ஆர். லசந்த, வீ. பீ. லக்ஷ்மன், கே. கே. நந்தாவத்தி மற்றும் டீ. ஏ. எஸ். பீ. சில்வா

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக் கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் 2007.01.25 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2009.04.24 ஆந் திகதிய இலங்கை வர்த்தமானியிலும் 2009.04.23 ஆந் திகதிய ''திவயின'', ''ஐலண்ட்'' மற்றும் ''தினக்குரல்'' பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான இரண்டு இலட்சத்து அறுபத்தொன்பதாயிரத்து பத்தொன்பது ரூபா எழுபத்தைந்து சதம் (ரூ. 2,69,019.75) 2006, நவெம்பர் 14 ஆந் திகதி முதல் அறவிடப்படவேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதிவரை இரண்டு இலட்சத்து பதினையாயிரத்து முன்னூற்றைந்து ரூபா நாற்பது சதம் (ரூ. 2,15,305.40) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பத்தொன்பது வீதம் (19%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக்கொள்வதற்கு பிணையாக வைக்கப்பட்டுள்ள, இங்கு அட்டவணையில் நேர்த்தியாக விபரிக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரரான பீ. கே. ஈ. சேனாபத்தி மூலமாக 2010 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 24 ஆந் திகதி மு. ப. 11.00 மணி முதல் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என இத்தால் அறியத்தருகின்றோம்.

**அட்டவணை**

மேல் மாகாணம், களுத்துறை மாவட்டம், வடக்கு களுத்துறை தொட்டமுனே களுத்துறை பெத்தையில் தொடங்கொட பிரதேச சபை எல்லைகளுக்குள், கோடீஹாலானையில் அமைந்த ''கோவிலாஉட வத்த'' எனும் ''மாஹாகொடவத்த'' என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் டீ. எச். அமரசிங்ஹ என்பவரால் தயாரிக்கப்பட்ட 1995, ஓகத்து 05 ஆந் திகதியிடப்பட்ட இல. 544 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 2 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன- வடக்கிற்கு : லொட் 1 ; கிழக்கிற்கு : ஹை வீதி ; தெற்கிற்கு : இவ்வரைபடத்திலிருந்து அகற்றப்பட்ட லொட் 4பி ; மற்றும் மேற்கிற்கு : லொட் 4சீ பன்சலை காணி ஆகிய இவ்எல்லைகளுக்குள் அமைந்த காணி விஸ்தீரணம் இருபத்தேழு பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 27பே.) அளவினைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டிடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் சகல வீதி உரிமைகள், ஏனைய சௌகரியங்கள், வரப்பிரசாதங்கள், உட்பிரவேசங்கள், இரண்டாந்தர மார்க்க உரிமைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய இணைப்புகளுடன் கூறப்பட்ட இல. 544 எனும் வரைபடத்திற்கு அமைவாக களுத்துறை காணிப்பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் ஜீ95/280 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர்கள் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

11-120

---

**வரையறுக்கப்பட்ட கொழும்பு யூனியன் வங்கி**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின்கீழ் விற்பனை*

**பெறுமதிமிக்க சொத்தின் ஏலவிற்பனை**

***14280 ஆம் இலக்க ஈட்டுமுறியால் ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரம்***

**தென் மாகாணம், காலி மாவட்டம், தல்பெ பத்துவ கதலுவ என்னும் இடத்தில் அமைந்துள்ள கபுகெவத்த என்னும் காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ரீ. வீரசிங்க என்பவரால் தயாரிக்கப்பட்ட 1967.05.16 ஆந் திகதிய 613 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளவாறு துண்டு 6 என்னும் பத்து பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 10பே.) விசாலமான காணித்துண்டும் அதன்கண் அமைந்துள்ள மண், மரங்கள், கட்டிடங்கள் அனைத்தையும் சேர்த்து.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அகங்கம, கதலுவ, கபுகெவத்த, கினிவெல்ல வீதி என்னும் இடத்தைச் சேர்ந்த போபகே கபில பிரியந்த மற்றும் நாகஹவெல விக்கிரமகே தம்மிகா ஜயந்தி ஆகியோர் அவர்களினது நடைமுறைக் கணக்கில் கடன்கள், முற்பணங்கள், மேலதிகப் பற்றுக்கள் என்ற வகையில் காலத்துக்குக் காலம் வங்கித் தொழில் வசதிகளை சொல்லப்பட்ட போபகே கபில பிரியந்த மாத்தறை பிரசித்த நொத்தாரிசு ஜே. எம். எஸ். ஜயவீர அத்தாட்சிப்படுத்திய 2008.03.25 ஆந் திகதி கொண்ட 14280 ஆம் இலக்க ஈட்டுமுறிவை நிறைவேற்றி பெற்றுள்ளார் ஆதலால்-

வரையறுக்கப்பட்ட கொழும்பு யூனியன் வங்கியினால் எமக்களிக்கப் பட்ட அதிகாரத்தின்படி மேற்படி ஆதனத்தை 2010 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 13 ஆந் திகதி திங்கட்கிழமை மு. ப. 11.00 மணி தொடக்கம் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் நாம் விற்பனை செய்வோம்.

**கொடுப்பனவு செய்யும் விதம்.**- ஏலவிற்பனையில் வெற்றிபெற்ற கொள்வனவாளர் விற்பனையின் முடிவில் பின்வரும் தொகைகளை ரொக்கப் பணமாகச் செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு செய்யப்பட்ட விலையின் 25% (இருபத்தைந்து வீதம்) ;
(2) உள்ளூர் அதிகார சபைக்கு செலுத்தப்படற்பாலதான விற்பனை வரி 1% (ஒரு வீதம்) ;
(3) ஏலதாரரின் தரகு கொள்வனவு விலையில் 2 1/ 2% (இரண்டரை வீதம் ) ;
(4) மொத்த விளம்பரச் செலவு ரூபா 2,00,000 ;
(5) எழுதுவினைஞரினதும் கூவுவோரினதும் கட்டணம் ரூபா 500 ;
(6) விற்பனை நிபந்தனைகளை அத்தாட்சிப்படுத்தியமைக்கான நொத்தாரிசுக் கட்டணம் ரூபா 3,000 ;
(7) பெறுமதிசேர் வரி கொள்வனவு விலையில் 12%.

கொள்வனவு விலையின் மிகுதி 75 சதவீதமும் ஏற்புடைத்தான விடத்தும் அத்துடன் இலங்கை அரசாங்கத்தினால் அல்லது வேறு ஏதேனும் அதிகாரசபையால் விதிக்கப்பட்டு செலுத்தப்படற்பாலவை யுமான வேறு எவையேனும் நியதிச்சட்ட விதிப்பனவுகள், தீர்வைகள், வரிகள் அல்லது அறவீடுகளும் விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் செலுத்தப்படுதல் வேண்டும்.

மேலதிக விபரங்களுக்கு யூனியன் வங்கியின் சட்டப் பகுதியுடன் தொடர்புகொள்ளவும். தொலைபேசி இல. 011-2370870.

சொக்மன் அன்ட் சமரவிக்ரம,
நூற்றாண்டு காலத்துக்கு மேலாக இலங்கையில்
அரச அங்கீகாரம்பெற்ற பிரபல
முன்னோடி பட்டய ஏலவிற்பனையாளர்,
பெறுமதி மதிப்பீட்டு ஆலோசகர் மற்றும் காணித்தரகர்.

| தலைமை அலுவலகம் : | நகர அலுவலகமும் காட்சியறையும் : |
|---|---|
| 24, டொரிங்டன் வீதி, கண்டி. | 290, ஹவ்லொக் றோட், கொழும்பு 5. |
| தொலைபேசி : 081-2227593 | தொலைபேசி : 011-2502680 2585408 |
| தொ.பே./ ஃபக்ஸ் : 081-2224371 | தொ.பே./ ஃபக்ஸ் : 011-2588176 |
| மின்னஞ்சல் : schokmankandy@sltnet.lk | மின்னஞ்சல் : schokman@samera1892.com |

இணையத்தளம் : www.schokmanandsamerawickreme.com

11-56

## நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பீ.எல்.சீ.

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் விற்பனை*

**நேஷன் ட்ரஸ்ட் வங்கி பீ.எல்.சீ. (முன்னர் நேஷன் ட்ரஸ்ட் வங்கி லிமிட்டெட்) இடம் அடகுவைக்கப்பட்ட பெறுமதியான சொத்துக்கள்**

**மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தின் தெற்கு அலுத்குரு கோரலை, அம்பத்தலே பஹல, கொட்டிகாவத்த, முல்லேரியாவ பிரதேச சபை எல்லைக்கு உட்பட்ட அவிசாவளை றோட்டின் குடாபுத்கமுவ கிராமத்தில் அமைந்த இறைவரி இலக்கம் 6/8 என்ற மில்லகஹாகந்த அல்லது வத்த என்ற காணிக்கு அதிகாரம்பெற்ற நிலஅளவையாளர் பந்துல ரணதுங்கவினால் அளந்து தயாரிக்கப்பட்ட இலக்கம் 36/ 2007 மற்றும் 2007.03.08 ஆந் திகதிகொண்ட வரைபடத்தின்படி பி என்ற லொட் படி அளந்து பிரிக்கப்பட்ட பத்து பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 10பே.) அல்லது 0.02529 ஹெக்டெயார் பரிமாணம் கொண்ட காணித்துண்டும் அதனுடன் தொடர்புடைய றோட்டுகள் உரிமையும் கொண்டதாகும்.**

கொழும்பு பிரசித்த நொத்தாரிசு நிரோதா சுபேக்ஷலி கலன்சூரியவினால் எழுதி உறுதிசெய்யப்பட்ட இலக்கம் 844 மற்றும் 2007.12.13 ஆந் திகதிகொண்ட அடகு ஒப்பந்தத்தின்கீழ் கொழும்பு 9, தெமட்டகொடை, கெண்ட் றோட், இலக்கம் பி2/ 2 என்ற இடத்தில் குடியிருக்கும் விஜேசூரிய ஆரச்சிகே டெரிக் வர்ணன் பெரேரா என்ற நபரால் மேற்படி நபருக்கு அடகுவைக்கப்பட்ட சொத்துக்கள் மேற்படி வங்கியினால் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி 2010.12.22 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு சொத்துக்கள் இருக்கும் இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

பணிப்பாளர் சபையின் பிரேரணை ஒப்பந்தம் பற்றி அறிவிப்பதற்காக 2009.12.04 ஆந் திகதி வர்த்தமானிப் பத்திரிகை மற்றும் 2010.02.10 ஆந் திகதி ''த ஐலண்ட்'', ''திவயின'' மற்றும் ''தினக்குரல்'' பத்திரிகைகளையும் பார்க்கவும்.

வெற்றியான கொள்வனவாளர் ஏலம் தீர்மானிக்கப்பட்டபின் கீழ்க்காணும் தொகையை பணத்தால் செலுத்தப்பட வேண்டும் :

(1) கொள்வனவு செய்யும் தொகையில் 10% (கொள்வனவு செய்யும் தொகையின் மிகுதி 90% மற்றும் கொள்வனவு விலைக்கு செலுத்தப்படவேண்டிய சட்டப்படியான மற்றும் ஏனைய சகல வரியுடன் ஏலத்திகதியில் இருந்து 30 நாட்களுக்குள் செலுத்தப்பட வேண்டும் ;
(2) கொள்வனவு செய்யும் தொகையில் 1% பிரதேச மற்றும் வரிப்பணமாக உரிய பிரதேச சபைக்கு செலுத்தப்பட வேண்டும் ;
(3) கொள்வனவு செய்யும் தொகையில் 2.5% ஏலதாரரின் கமிஷன் தொகையாக செலுத்தப்பட வேண்டும் ;
(4) விளம்பரச் செலவுகளிலிருந்து 50% செலுத்தப்பட வேண்டும் ;
(5) இலிகிதர் மற்றும் கோஷம் எழுப்பும் கட்டணங்கள் 500 ரூபா ;
(6) நொத்தாரிசு கட்டணம் 2,500 ரூபா ;

உரிமை உறுதி மற்றும் ஏனைய ஆவணங்களை பரிசீலிக்க மற்றும் பிரத்தியேகமாக ஏனைய தகவல்கள் பெறுவதற்காக தொடர்புகொள்ளவேண்டியது :-

"முகாமையாளர்-பாவனையாளர் சட்டத்துறை, நேஷன் ட்ரஸ்ட் வங்கி பீ.எல்.சீ., இல. 256, சேர். இராமநாதன் மாவத்தை, கொட்டாஞ்சேனை, கொழும்பு 15" உடன் தொடர்புகொள்ளவும். தொலைபேசி இல. 077-3918733,011-4682403.

ஐ. சீ. ஏ. பெரேரா (சமாதான நீதவான்),
நீதிமன்ற ஆணையாளர்,
மதிப்பீட்டாளர் மற்றும் ஏலதாரர்.

இல. 86, புதிய கண்டி வீதி,
வெலிவேரிய.
தொலைபேசி இல. : 033-2255115, 077-3698690.

11-52

---

## டீஎப்சீசீ வர்தன வங்கி லிமிட்டெட்

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக் கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழான விற்பனை*

**பெறுமதிமிக்க சொத்து பகிரங்க ஏல விற்பனை**

***1563 ஆம் இலக்க அடைமான பிணை உறுதி மூலம் அடகுவைக்கப்பட்ட உடைமையின் விவரணம்***

**மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், அலுத்குரு கோரளே, ராகம்பத்துவில், கம்பஹா மாவட்ட அபிவிருத்தி சபையின் (DDC Gampaha) இலக்கம் 2, ஹெந்தளை உப அலுவலக எல்லைக்குட்பட்ட, ஹெந்தளை, கெரவலப்பிட்டிய கிராமத்தில் அமைந்துள்ள அனுமதிப்பத்திரம்பெற்ற நிலஅளவையாளர் ஏ. டபிள்யூ. திலகரத்ன அவர்களால் வரையப்பட்ட, 1989 ஆம் ஆண்டு யூன் மாதம் 15 ஆந் திகதியிடப்பட்ட 104ஏ ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 294 எனக் குறிப்பிடப்படும் பிரிக்கப்பட்டதும், வரையறுக்கப் பட்டதுமான காணி**

**(காணியின் விஸ்தீரணம் : 1ஏ. 1று. 7பே.)**

***மீள் அளவை செய்யப்பட்டதற்கிணங்க காணியின் விபரம் பின்வருமாறு :***

***மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், அலுத்குரு கோரளே, ராகம்பத்துவில், வத்தளை பிரதேச சபை மற்றும் ஹெந்தளை உப அலுவலக எல்லைக்குட்பட்ட, ஹெந்தளை கெரவலப்பிட்டிய கிராமத்தில் அமைந்துள்ள அனுமதிப்பத்திரம்பெற்ற நிலஅளவையாளர் டீ. டீ. சீ. ஏ. பெரேரா அவர்களால் வரையப்பட்ட, 2001 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 5 ஆந் திகதியிடப்பட்ட 2225 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு ஏ எனக் குறிப்பிடப்படும் மாகம்மனமுலவத்த மற்றும் அட்டம்பொலவத்த என்று அழைக்கப்படும் பிரிக்கப்பட்டதும், வரையறுக்கப்பட்டதுமான காணி அதிலுள்ள கட்டிடங்கள் மற்றும் அனைத்தும் உள்ளடங்கியதாக***

***(காணியின் விஸ்தீரணம் : 1ஏ. 1று. 9.36பே.)***

***கீழே குறிப்பிடப்படும் காணிகள் ஊடாகச் செல்லும் பாதை உரிமையுடன்-***

**1. மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், அலுத்குரு கோரளே, ராகம்பத்துவில், கம்பஹா மாவட்ட அபிவிருத்தி சபையின் (DDC Gampaha) இலக்கம் 2, ஹெந்தளை உப அலுவலக எல்லைக்குட்பட்ட, ஹெந்தளை, கெரவலப்பிட்டிய கிராமத்தில் அமைந்துள்ள அனுமதிப்பத்திரம்பெற்ற நிலஅளவையாளர் ஏ. டபிள்யூ. திலகரத்ன அவர்களால் வரையப்பட்ட, 1989 ஆம் ஆண்டு யூன் மாதம் 15 ஆந் திகதியிடப்பட்ட 104ஏ ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 290 எனக் குறிப்பிடப்படும் பிரிக்கப்பட்டதும், வரையறுக்கப் பட்டதுமான காணி**

**(காணியின் விஸ்தீரணம் : 2ஏ. 1று. 3பே.)**

**2. மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், அலுத்குரு கோரளே, ராகம்பத்துவில், கம்பஹா மாவட்ட அபிவிருத்தி சபையின் (DDC Gampaha) இலக்கம் 2, ஹெந்தளை உப அலுவலக எல்லைக்குட்பட்ட, ஹெந்தளை, கெரவலப்பிட்டிய கிராமத்தில் அமைந்துள்ள அனுமதிப்பத்திரம்பெற்ற நிலஅளவையாளர் ஏ. டபிள்யூ. திலகரத்ன அவர்களால் வரையப்பட்ட, 1989 ஆம் ஆண்டு யூன் மாதம் 15 ஆந் திகதியிடப்பட்ட 104ஏ ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 37 எனக் குறிப்பிடப்படும் பிரிக்கப்பட்டதும், வரையறுக்கப் பட்டதுமான காணி**

**(காணியின் விஸ்தீரணம் : 1ஏ. 0று. 5பே.)**

*(பிரசித்த நொத்தாரிசு எஸ். வலதர அவர்களால் அத்தாட்சிப் படுத்தப்பட்ட 2007 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 19 ஆந் திகதியிடப்பட்ட 1563 ஆம் இலக்க அடைமான பிணை உறுதி மூலம், 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின்கீழ் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசில் முறையாக ஸ்தாபிக்கப்பட்டதும், கொழும்பு 3, சென். அந்தனீஸ் மாவத்தை, லக்கி பிளாஸா, 2 ஆம் மாடி, இலக்கம் 70 இல் பதிவுசெய்யப்பட்ட அலுவலகத்தைக் கொண்டதுமான வரையறுக்கப்பட்ட ஸ்டான்டேட் டிரேடிங் (பிறைவேட்) லிமிட்டெட் நிறுவனத்தினால் டீஎப்சீசீ வர்தன வங்கிக்கு அடகு வைக்கப்பட்டு மீட்கப்படாத சொத்து)*

டீஎப்சீசீ வர்தன வங்கியினால் எமக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி 2010 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 25 ஆந் திகதி வியாழக்கிழமை மு. ப. 11.00 மணிக்கு எம்மால் ஸ்தலத்தில் பகிரங்க ஏலவிற்பனைக்கு விடப்படும்.

**கொடுப்பனவு செய்யும் முறை.-** ஏலவிற்பனையில் வெற்றிபெற்ற கொள்வனவாளர், விற்பனையின் முடிவில் பின்வரும் தொகைகளை ரொக்கப் பணமாகச் செலுத்த வேண்டும் :-

